

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மக்களுக்கு நம்பிக்கையை விதைக்கும் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது விரைந்து தீர்வுகாணப்பட்டு, உரிய பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி. மு.அருணா மற்றும் அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பின்படி, "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" என்ற தலைப்பில் நாமக்கல் நாடாளுமன்ற தொகுதி கூட்டம் நாமக்கல் பூங்கா சாலையில் நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி, நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி, மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - எஸ்.எஸ்.சிவசங்கர் - டி.ஆர்.பி.ராஜா சிறப்புரை!

# திருவாரூரில் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவாரூர், பிப்.18-

நாகை நாடாளுமன்ற தொகுதி தேர்தல் முன்னோட்டத்திற்கான கூட்டம் இன்று (18.02.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணிக்கு மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கோட்டமாம் "கலைஞர் கோட்டம் அரங்கில்" நடைபெறுகிறது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்கக் கூட்டத்தில் பங்கேற்க கழக தீரர்களுக்கு அழைப்பு விடுத்து மாவட்டக் கழக செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர்தம் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:-

புனிதம் மிக்க இந்தியாவை ,மதத்தின் அடிப்படையாலும், மொழியின் அடிப்படையாலும் தனது பாசிச கொள்கையை மட்டுமே வைத்துக்கொண்டு மதவாத சக்திகளின் இருப்பிடமாக்க முயலும் மதவாத பி.ஜே.பி.யிடம் இருந்து மீட்டு, இந்தியாவை திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழியில் வெற்றியோடு பயணிக்கச் செய்வதோடு, ஒன்றிய பி.ஜே.பி. அரசிடம் கடந்த பத்து ஆண்டுகளாக நாம் இழந்த அனைத்து உரிமைகளையும் மீட்டெடுக்கவும், வருகின்ற 2024 நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் 40 தொகுதிகளையும் இந்தியா கூட்டணி வென்றிடும் வகையில் , தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் சீரிய வழிகாட்டுதல்களோடு ,தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" நாகை நாடாளுமன்றத்திற்கான கூட்டம் இன்று (18.02.2024) மாலை 5.00மணிக்கு மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கோட்டமாம் காட்டூர் கலைஞர் கோட்டம் அரங்கில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்திற்கு நாகை மாவட்டச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவருமான என்.கௌதமன் வரவேற்புரையாற்றுகிறார். சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ,தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர், தாட்கோ தலைவர் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், மாநில விவசாயத் தொழிலாளர் அணி இணைச்செயலாளர் ஜெக வீரபாண்டியன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் பழஞ்சூர் கே.செல்வம், மாநில விவசாய அணி துணை செயலாளர் கே.ஆர்.என்.போஸ், மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜெய.பிரகாஷ், மாநில அயலக அணி துணை செயலாளர் டி.ஆர்.கே.விஜயன் ஆகியோர் முன்னிலை ஏற்கின்றனர்.

தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் சிறப்புரையாற்ற இருக்கிறார்.

கூட்டத்தில் திருவாரூர் மாவட்ட தி.மு.க., மற்றும் நாகை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் பங்கேற்று ஆலோசனைகளை வழங்க இருக்கின்றனர். இந்த கூட்டத்தில் நமது திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த வாக்குச்சாவடி முகவர்கள், பி.எல்.ஏ. 2, பூத் கமிட்டி உறுப்பினர்கள் பி.எல்.சி., சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புக்கள், மற்றும் பொது மக்கள் அனைவரும் பங்கேற்று , பாசிச பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்தி இந்தியாவை வெற்றிப்பாதைக்கு அழைத்து செல்லும் திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் கரத்துக்கு வலுசேர்க்க அலைகடலென ஆர்ப்பரித்து வருகவென அழைக்கிறேன்.

இவ்வாறு கூட்டத்திற்கு தலைமை ஏற்கும் திருவாரூர் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு சிறப்புரை!

# "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி பொதுக்கூட்டம்!

## துரை.சந்திரசேகரன் - பூண்டி கே.கலைவாணன் - கா.அண்ணாதுரை அறிக்கை!

தஞ்சாவூர், பிப்.18-

"உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி பொதுக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள், தோழர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொள்ள வேண்டுகோள் விடுத்து தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ, தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ ஆகியோர் அறிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி இன்று (18.02.2024 - ஞாயிற்றுக்கிழமை), மாலை 04.00 மணியளவில், தஞ்சாவூர், திலகர் திடலில் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" என்ற தலைப்பில் தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றுகிறார்.

தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி, எல்.கணேசன், மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணை செயலாளர் உ.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழகப் பொருளாளரும், பாராளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு எம்.பி, அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்.

இதில் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர்கள் துரை.கி.சரவணன், அக்ரி கே.பி.டி.கணேசன், இரா.சங்கர், சி.வீரகணேசன், சுப.சரவணன், நாகை மனோகரன், மாநிலக் கழக நிர்வாகிகள் ஏனாதி பா.பாலசுப்ரமணியன், து.செல்வம், எம்.ராமசந்திரன், பி.இராஜமாணிக்கம், கே.டி.மகேஸ்கிருஷ்ணசாமி, ப.ஆடலரசன், சி.இறைவன், சு.ஞான சேகரன், டி.செல்வம், டி.கணபதி, ஆர்.எஸ்.பாண்டியன், த.காரல்மார்க்ஸ், அர. திராவிடம், எஸ்.ஜித்து, நா.இளையராஜா, த.சோழராஜன், கு.தெ.முத்து, மருஅஞ்சுகம் பூபதி, பழஞ்சூர் கே.செல்வம், வீ.ஜெயபிரகாஷ், கார்த்திகேயன் வேலுச்சாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

கூட்ட முடிவில் தஞ்சை மாநகரக் கழகச் செயலாளர் - மேயர் சண்.இராமநாதன் நன்றியுரையாற்ற உள்ளார்.

அதுசமயம், தஞ்சை நாடாளுமன்ற தொகுதிக் குட்பட்ட தஞ்சை மத்திய, தெற்கு மற்றும் திருவாரூர் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பி.எல்.ஏ2, பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக தொண்டர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ, தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. ஆகியோர் அறிக்கை விடுத்துள்ளனர்.

### சிதம்பரத்திற்கு புதிய பேருந்து வழித்தடம் வழங்கிய முதல்வருக்கு நன்றி!

# மயிலாடுதுறை முதல் வைகல் வரை பேருந்து வழித்தடம் வழங்கிடுவீர்!

## சட்டப் பேரவையில் நிவேதா முருகன் கேள்வி!

**சென்னை, பிப். 17-**

**மயிலாடுதுறை முதல் வைகல் வரை புதிய பேருந்து வழித்தடம் வழங்கிடுவீர் என்று சட்டப்பேரவையில் நிவேதா முருகன் கேள்வி நேரத்தின் போது கேள்வி எழுப்பினார்.**

இது குறித்த விவாதம் வருமாறு:-



**நிவேதா எம்.முருகன் :** பூம்புகார் தொகுதி, பொறையார், தரங்கம்பாடி, மாணிக்கபங்கு, வானகிரி, பூம்புகார், பழையாறு கொள்ளிடம் உள்ளிட்ட மீனவக் கிராமங்கள் வழியாக சிதம்பரம் செல்ல பேருந்து வழித்தடம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்:** உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டு அந்தப் பேருந்து இயக்கப்பட்டுவிட்டது.

**நிவேதா எம்.முருகன்:** எனது பூம்புகார் தொகுதி மக்களின் பல்லாண்டுகால கோரிக்கையை ஏற்று பொறையாரில் இருந்து தரங்கம்பாடி, சின்னங்குடி, வானகிரி, பூம்புகார் வழியாக சீர்காழிக்கு புதிய பேருந்து சேவையை வழங்கிய திராவிட நாயகர் முதலமைச்சர் அவர்களுக்கு கோடான கோடி நன்றியையும், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு வழிவகை செய்த நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் பயன்பெறுகின்ற எனது தொகுதி மக்களின் சார்பாகவும், மீனவச் சொந்தங்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு,

மேலும், மயிலாடுதுறை முதல் வைகல் வரை, புதிய பேருந்து சேவையை வலுவூர், மங்கைநல்லூர், அனந்தநல்லூர், கோமல், கொத்தங்குடி, மாந்தை, நக்கம்பாடி, ஸ்ரீகண்டபுரம், பாலையூர் நல்லூவூர், எஸ்.புதூர், மேல அகலங்கண், கோனேரிராஜபுரம், சிவனாரகரம், வைகல் வரையிலான புதிய வழித்தடத்தில் பேருந்து சேவை தொடங்கிட அரசு முன்வருமா?

**அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்:** உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, மயிலாடுதுறை-கோமல் வரையில், மயிலாடுதுறை-கும்பகோணம் முக்கிய சாலையில் அமைந்துள்ள பகுதியாக உள்ளது. அங்கு அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. உறுப்பினர் அவர்கள் அங்கிருந்து உள்ளே செல்வதற்கு பேருந்து வசதிகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். துறை அதிகாரிகள் மூலம் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**நிவேதா எம்.முருகன்:** கோமல் சாலையில் பேருந்துகள் போய்க்கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே இருக்கின்ற வழித்தடங்களைப் போல், இந்தப் புதிய வழித்தடமும் மக்களின் பயன்பாட்டிற்கு தேவைப்படுகின்ற காரணத்தால், அமைச்சர் அவர்கள் முன்வந்து உடனடியாக பேருந்துகளை இயக்கினால், மக்களுடைய பயன்பாட்டிற்கு ஏதுவாக இருக்கும்

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினரது கோரிக்கையின்மீது, துறை அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மாங்குடி மதியழகன்

**பிப்ரவரி 18 (1974)**



கழகம் துவங்கப்பட்ட போதே உறுப்பினராகியதுடன், 1950களில் அயல்நாடான பர்மாவில் கழகத்தை வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

தமிழகம் திரும்பிய பின்னர், 1960களில் இராமநாதபுரம் மாவட்ட துணைச் செயலாளராகவும் – முதுகுளத்தூர் வட்டச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

முதுகுளத்தூர் ஒன்றிய பெருந்தலைவராகவும் – மாநில பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு உறுப்பினராகவும், முதுகுளத்தூர் நிலவள வங்கி தலைவராகவும், ஆனையூர் கூட்டுறவு வங்கி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, சட்டநகல் எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு மதுரை மத்திய சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தி.மு.க. தொண்டர் அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### கழக தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் அறிவிப்பு!

தி.மு.க. தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 24-2-2024 சனிக்கிழமை, காலை 11.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: **தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் மற்றும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 16.02.2024

மாஸ்டர் **பெ.சேகர்**
செயலாளர்,
தி.மு.க. தொண்டர் அணி.




கோவை மாவட்டம் போத்தனூர் சங்கமம் கல்யாண மண்டபத்தில், தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் "நம்மில் ஒருவர் நமக்கான தலைவர் மு.க.ஸ்டாலின்" எனும் தலைப்பில் மாபெரும் கருத்தரங்கம் மற்றும் கலந்துரையாடல் கூட்டம் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் செயலாளர் டாக்டர். அ. சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது. சிறுபான்மையினர் நல ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ் சிறப்புரையாற்றிய இந்நிகழ்வில், அணியின் துணைச் செயலாளர் இரா. அன்வர்கான் வரவேற்றார். இந்நிகழ்வுக்கு, இலா.தேவசீலன், முகமது அயூப் அலி, சந்தோஷ் டோமினிக், ஏ.நிசார் அகமது, எஸ்.ஏ.பி.ஏ. பாக்கியராஜ், ஓ.அன்வர் அப்துல்லா, சையத் அஸ்லம் பாஷா, ஷாஜஹான் மற்றும் அல்லாபிச்சை ஆகியோர் முன்னிலை வகித்தனர். அல்தாப் உசேன் வரவேற்புரையாற்றினார்.